தினமணி

**நேப்பயிர் ஒட்டுப்புல் சாகுபடி பயிற்சி முகாம்**

First Published : 11 Nov 2011 01:03:15 PM IST

காரியாபட்டி, நவ. 10: கோவிலாங்குளம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கான கோ.(சி.என்)-4 கம்பு நேப்பயிர் ஒட்டுப்புல் சாகுபடி பயிற்சி முகாம் நடைபெற்றது. திட்ட ஒருங்கிணைப்பாளர் பால்பாண்டி பயிற்சியைத் தொடக்கி வைத்துப் பேசுகையில், கோ.(சி.என்)-4 எனப்படும் நேப்பயிர் கம்பு ஒட்டுப்புல், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் கண்டறியப்பட்டது என்றார். உதவிப் பேராசிரியர் ராதிகா கூறுகையில், இவ்வகை ஒட்டு புல்களை சாகுபடி செய்தால் கால்நடைகளின் பசுந்தீவனத் தேவையை நிவர்த்தி செய்துகொள்ள முடியும். பால் உற்பத்தியும் அதிகரிக்கும் என்றார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை திட்ட தொழில்நுட்ப உதவியாளர் கவிதா உள்ளிட்டோர் செய்திருந்தனர். இம்முகாமில், ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

---

தினமலர்

உண்மையின் உரைகல்

**அடுத்த 6 மாதங்களில் தேசிய பால்பண்ணைத் திட்டம்: திட்டக்குழு**

நவம்பர் 12,2011,13:34



சென்னை : பால் பண்ணை விவசாயிகளின் மேம்பாட்டிற்காக உலக வங்கியின் உதவியுடன் ரூ.1584 கோடி செலவில் அமைக்கப்பட்டு வரும் தேசிய பால் பண்ணைத் திட்டம் அடுத்த 6

மாதங்களில் துவங்கப்பட உள்ளதாக திட்டக் குழு அறிவித்துள்ளது. இது தேசிய பால் பண்ணை மேம்பாட்டு கழகத்தால் துவக்கப்பட உள்ளதாகவும் திட்டக்குழு தெரிவித்துள்ளது. அடுத்த 6 மாதங்களில் அல்லது அதற்கு முன்பாக முழுவடிவம் பெற இருக்கும் தேசிய பால்பண்ணைத் திட்டத்தின் மூலம் பால் பண்ணை விவசாயிகள் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களுக்கு நேரடியாக பால் விற்பனை செய்ய முயற்சி மேற்கொள்ள உள்ளதாக திட்டக்குழு ஆலோசகர் வி.வி.சதாமேத் தெரிவித்துள்ளார்.

**நடப்பாண்டு சிறப்பான சாகுபடி பாசுமதி அரிசி ஏற்றுமதி அதிகரிக்கும்**

நவம்பர் 12,2011,00:08



புதுடில்லி:நடப்பாண்டு,பருவமழை பரவலாக பெய்ததால், பாசுமதி அரிசி சாகுபடியும், ஏற்றுமதியும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.மேலும் சர்வதேச சந்தையில், பாசுமதி அரிசிக்கான தேவை அதிகரித்துள்ளதால், இந்த வாய்ப்பை சரியாக பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு,ஒரு டன் பாசுமதி அரிசிக்கு 900டாலர் என நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை, அதிகரிக்க வேண்டும் என மத்திய அரசுக்கு ஏற்றுமதி யாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உள்நாட்டில் போதுமான அளவிற்கு பாசுமதி அரிசியை இருப்பில் வைத்திருக்கும் பொருட்டும்,அதன் விலை உயர்வ தை தடுப்பதற்காகவும்,ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.ஆனால்,தற்போது சர்வதேச சந்தையில்தேவை அதிகரித்துள்ள தால்,பாசுமதி அரிசி ஏற்றுமதி மூலம் லாபம் ஈட்ட முடியாத நிலையில் ஏற்றுமதி யாளர்கள் உள்ள னர்.

சர்வதேச சந்தையில் தற்போது ஒரு டன் பாசுமதி அரிசி விலை,800-900டாலர் என்ற அளவில் உள்ளது.நடப்பு 2011- 12ம் நிதியாண்டின்,சென்ற செப்டம்பருடன் முடிந்த அரையாண்டில்,பாசுமதி அரிசி ஏற்றுமதி 14.2 லட்சம் டன்னில் இருந்து14.5 லட்சம் டன்னாக

உயர்ந்துள்ளது.சென்ற 2010-11ம் நிதியாண்டில், இந்தியா 10 ஆயிரத்து 582 கோடி ரூபாய் மதிப்பிற்கு 21 லட்சம் டன் பாசுமதி அரிசியை ஏற்றுமதி செய்துள்ளது.

இந்தியாவின் மொத்த பாசுமதி அரிசி ஏற்றுமதியில்,60 சதவீத பங்களிப்பை சவுதி அரேபியா,ஈரான் நாடுகள் கொண்டுள் ளன.சென்ற 2010-11ம் நிதியாண்டில் நாட்டின் பாசுமதி அரிசி உற்பத்தி 45 லட்சம் டன்னாக இருந்தது.இது,இதற்கு முந்தைய நிதியாண்டில் 40 லட்சம் டன்னாக இருந்தது.

**பால் உற்பத்தியைப் பெருக்க ரூ. 1,584 கோடியில் புதிய திட்டம்**

First Published : 12 Nov 2011 05:24:55 AM IST

சென்னை, நவ.11: பால் உற்பத்தியைப் பெருக்க ரூ. 1,584 கோடியில் புதிய திட்டம் விரைவில் அமல்படுத்தப்படும் என மத்திய திட்டக்குழுவின் வேளாண் ஆலோசகர் வி.வி. சதாமேட் தெரிவித்தார்.

சென்னையில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதல்வர் ஜெயலலிதா அறக்கட்டளை சொற்பொழிவு நிகழ்ச்சியில் அவர் பேசியது:

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் கால்நடை பராமரிப்பு சிறப்பாகச் செயல்படுத்தப்படவில்லை. எனவே, 12-வது ஐந்தாண்டு திட்டத்தில் கால்நடை வளர்ப்புக்கு முக்கியத்துவம் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாநிலத்திலும் வளர்ப்போர் அதிகளவில் உள்ளனர். ஆனால், அவர்களுக்கு அவற்றை பராமரிப்பது தொடர்பான பயிற்சி அளிப்பதில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. எனவே கால்நடை பராமாரிப்புத் துறை, இதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் பால்வள உற்பத்தி பன்மடங்கு பெருகும்.

மேலும், நம் நாட்டில் கால்நடை மருத்துவர்களின் தேவை மிக அதிகமாக உள்ளது. இதனால் கால்நடை பராமரிப்பு பயிற்சியாளரின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்போது கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகளுக்கு இலவச ஆடுகள் வழங்கும் திட்டம் தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், அவர்களுக்கு கால்நடை பராமரித்தல் பயிற்சியும் அளிப்பது அவசியம்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், தேசிய அளவில் கால்நடைகள் குறித்த ஆராய்ச்சியை செய்து வருகிறது. இவற்றோடு மாநிலங்களில் இயங்கும் கால்நடை

மையங்களுக்கும், விவசாய தொழில்நுட்ப மேலாண்மைக் கழகத்துக்கும் இடையேயான உறவை வலுப்படுத்துவதன் மூலம் கால்நடை வளர்ப்போர் மிகுந்த பயனடைவார்கள்.

இதனிடையே, கால்நடைகளால் பால் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் உலக வங்கியின் நிதியுதவியுடன் ரூ. 1,584 கோடி செலவில் தேசிய அளவிலான பால்வளத் திட்டம் விரைவில் அமல்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டத்தால் கால்நடை வளர்ப்போர் நேரடி லாபம் அடைய முடியும் என்றார் வி.வி. சதாமேட்.

கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் டி.கே.எம். சின்னையா:

மனிதர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ வசதியை போலவே கால்நடைகளுக்கும் சிறந்த மருத்துவ உதவி அளிக்க வழிவகை செய்யப்படும். தமிழகத்தில் 20 சதவீத கால்நடை தீவனத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் பால்வளத்தை அதிகரிக்க சுமார் 24 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கால்நடைத் தீவனப் பொருள்கள் பயிரிடப்பட்டு பராமரிக்கப்படும் என்றார் அவர்.

**பூச்சி தாக்கும் அபாயம் சம்பா விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 12,2011,23:47 IST

திருவள்ளூர்: பருவ நிலை மாற்றத்தால், சம்பா நெற்பயிர்களை பூச்சிகள் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என, விவசாயிகள் கவலையுடன் உள்ளனர். ஐப்பசியில் அடைமழை, மார்கழியில் கடும் பனி என, பெரியவர்கள் கூறுவர். ஆனால், தற்போது இதற்கு மாறாக, ஐப்பசியில் பனி பெய்து வருகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில் ஏற்கனவே நடந்த மணல் திருட்டு, ஏரிகள் தூர் வாராதது, ஆக்கிரமிப்பு ஆகியவற்றால் போதிய மழைநீரை சேமிக்க முடியவில்லை. இதனால், நிலத்தடி நீர் முற்றிலும் குறைந்து விட்டது. கடந்த சொர்ணவாரி பட்டத்திலேயே விவசாயிகள் பலர், தங்கள் விளை நிலங்களிலிருந்த நெற்பயிர்களை காப்பாற்ற முடியாமல் அவதிப்பட்டனர். இந்நிலையில், கொஞ்சம் இருந்த நிலத்தடி நீரையும், ஐப்பசியில் அடை மழை பெய்யும் என நம்பியும் சம்பா பயிரிட்டனர். பருவ மழையும் பெய்யாமல் ஏமாற்றி விட்டது. ஏற்கனவே கிராமப்புறங்களில் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்துக்கு ஆட்கள் சென்று விடுவதால், விவசாய கூலி வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறை, அடிக்கடி ஏற்படும் மின்தடை, நிலத்தடி நீர்மட்டம் குறைவு, பருவ மழை ஏமாற்றம் என விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இக்கவலைகள் ஒருபுறம் இருக்க, தற்போது ஐப்பசியில் பனி மூட்டம் அதிகம் இருப்பதால், நெற்பயிர்களை பூச்சிகள் தாக்கும் அபாயம் உள்ளது என, மற்றொரு கவலையும் இவர்களைத் தொற்றிக் கொண்டுள்ளது. இவ்வாறு சொர்ணவாரி, சம்பா, குறுவை என ஒவ்வொரு சாகுபடியிலும் விளை நிலத்தில் போட்ட பணத்தை எடுக்க முடியாத நிலையில், விவசாயிகள் பலர்

கடனாளிகளாக உள்ளனர். பல விவசாயிகள், தங்கள் விளை நிலத்தை பிளாட்டுகளாக மாற்றி விற்று வரும் நிலையும், வறுமையால் ஏற்பட்டுள்ளது.

**தரம் குறைந்த விதைகளை விற்றால் கடும் நடவடிக்கைநெல்லை விதை ஆய்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 12,2011,03:44 IST

திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் தரம் குறைந்த விதைகளை விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என விதை ஆய்வு துணை இயக்குனர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.விதை ஆய்வு துணை இயக்குனர் சவுந்தரராஜன் அறிக்கை:நெல்லை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. பிசான பருவ நெல் சாகுபடி பணிகள் துவக்கப்பட்டு நெல் நாற்று விடும் பணிகள் நடக்கிறது. விவசாயிகளுக்கு தேவையான நெல் விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்கள், தனியார் விற்பனை நிலையங்கள் மூலம் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.விதை விற்பனையாளர்கள் விவசாயிகளுக்கு தேவையான நல்ல முளைப்புத்திறன் கொண்ட விதைகளை விற்பனை செய்ய வேண்டும். வெளி மாநில விதைகளை விற்பனை செய்யும் போது அதற்கான படிவம் 2ஐ கண்டிப்பாக பெற்று வைத்திருக்க வேண்டும்.விதை வாங்குபவர்கள் சம்பந்தப்பட்ட விற்பனை நிலையங்களில் பில் கேட்டு பெற வேண்டும். விதை விற்பனை செய்பவர்கள் அறிவிக்கப்படாத ரக விதைகளை விற்பனை செய்யக்கூடாது. விற்பனை நிலையங்களில் விதை விலை விபரப்பட்டியல், இருப்பு குறித்த தகவல் பலகை விவசாயிகள் பார்வையில் படும்படி வைக்க வேண்டும். விற்பனை செய்யப்படும் விதைகளுக்கு பில் வழங்கப்பட வேண்டும். பில்லில் விவசாயிகள் கையொப்பம் பெற வேண்டும். இந்த நடைமுறைகளை மீறும் விற்பனையாளர்கள் மீது விதைச்சட்டம் 1966 மற்றும் விதை கட்டுப்பாட்டு ஆணை 1983ன்படி நடவடிக்கை எடுக்கப்படும். உரிமம் பெற்ற விற்பனையாளர்களிடம் மட்டும் விவசாயிகள் விதைகளை வாங்க வேண்டும். தரம் குறைந்த விதைகளை விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு விதை ஆய்வு துணை இயக்குனர் சவுந்தரராஜன் தெரிவித்தார்.

**பட்டு வளர்ப்பின் மூலம் ரூ.1 லட்சம் லாபம் பெறலாம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 11,2011,23:19 IST

சிவகங்கை : ""புதிய தொழில் நுட்பத்தில் பட்டு வளர்த்தால் ஆண்டிற்கு நிகர லாபம் 1 லட்ச ரூபாய் வரை பெறலாம்,'' என, மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி சிவசுப்பிரமணியன் தெரிவித்தார்.

சிவகங்கை அருகே கண்டுப்பட்டியில் பட்டு வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. உதவி பட்டு ஆய்வாளர் சந்திரசேகரன் வரவேற்றார்.
விஞ்ஞானி சிவசுப்பிரமணியன் பேசியதாவது: பட்டு வளர்ப்பில் புதிய தொழில்நுட்பத்தை கடைபிடித்து, தண்டு மூலம் புழுக்களுக்கு உணவளிப்பதால், வேலையாட்களை குறைவாக பயன்படுத்தி, ஒரு ஏக்கரில் மல்பரிபயிர் செய்து பட்டு வளர்த்தால், ஆண்டுக்கு நிகர லாபமாக ரூ.1 லட்சத்திற்கு மேல் கிடைக்கும், என்றார். ஆய்வாளர் பழனித்துரை, நாட்டரசன்கோட்டை தொடக்க விவசாய கூட்டுறவு வங்கி உதவி செயலாளர் முருகேசன், இளநிலை ஆய்வாளர்கள் பாஸ்கரன், திருப்பதி, கருப்பையா, பாலகிருஷ்ணன் பங்கேற்றனர்.

## 1100 ஏக்கரில் கூட்டு பண்ணை விவசாயம் : எக்ஸ்னோரா நிறுவனர் நிர்மல் தகவல்

பதிவு செய்த நாள் : நவம்பர் 11,2011,23:08 IST

சிவகாசி : ""விருதுநகர் மாவட்டத்தில் 1100 ஏக்கரில் கூட்டு பண்ணை விவசாயம் திட்டம் செயல்படுத்த உள்ளதாக,'' எக்ஸ்னோரா நிறுவனம்இன்டர் நேஷனல் சேர்மன் நிர்மல் தெரிவித்தார். சிவகாசி வேலாயுதம் ரஸ்தா சிவிக் எக்ஸ்னோரா, ராஜபாளையம் ரவுண்ட் டேபிள், இன்னர் வீல் கிளப் மற்றும் ரோட்டரி சங்கம் சார்பில்சிவகாசியில் நடந்த "எக்ஸ்னோரா கோ ஆர்கானிக் எக்போ 2011' கருத்தரங்கில் அவர் பேசியதாவது: வெப்பமயமாதலால் உலகம் மோசமான நிலைக்கு செல்கிறது. கடல் உள்வாங்கி, நிலத்தில் கடல் நீர் புகுந்து, விவசாயம் செய்ய முடியாத நிலை உருவாகும். 2016-2018ல் பீக் ஆயில் காலமாக மாறும். ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.1000,2000க்கு விற்பனையாகும். இதற்கு தீர்வு, விவசாய நிலத்தை கண் இமைபோல் காக்க வேண்டும். வெளிநாடுகள் ஐந்து ஆண்டுகளில் வெளியிடும் மாசு படுத்தலை, இந்தியா ஒரே ஆண்டில் உருவாக்கி விடுவதாக புள்ளி விபரம் கூறுகிறது.

கழிவுகளை வீணாக்காமல் மறுசுழற்சி செய்து உரமாக்க வேண்டும். கழிவுகளை மறுசுழற்சி செய்வது பூமிக்கு நாம் ஆற்றும் சேவையாகும். திடக்கழிவுகளை உரமாக்க வேண்டும், திரவ கழிவுகளை சுத்திகரித்து பயன்படுத்த வேண்டும். சென்னையில் 25 ஆயிரம் அடுக்குமாடி தோட்டங்கள் உள்ளன. இதற்கு நல்ல வரவேற்பு உள்ளது. உலகிலே இஸ்ரேலில் சிறப்பாக விவசாயம் செய்கின்றனர். அந்த நாட்டை விட நாம் 10 மடங்கு நீரை கூடுதலாக செலவு செய்கிறோம். விவசாயத்தில் நவீன மாற்றம் அவசியம். விவசாயத்தை மேம்படுத்த கூட்டு பண்ணை அமைத்து வருகிறோம். விருதுநகர் மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்த உள்ளோம். இதற்காக 1100 ஏக்கர் நிலம் வாங்கி, அதில் சமத்துவ பண்ணை மூலம் விவசாயம் செய்ய உள்ளோம், என்றார். தொழில் அதிபர் மகேஸ்வரன் துவக்கி வைத்தார். எக்ஸ்னோரா தலைவர்

பிரேமா முன்னிலை வகித்தார். செயலாளர் லதா வரவேற்றார். நகராட்சி தலைவர் கதிரவன், துணை தலைவர் அசன் பதுரூதீன், ரவுண்ட் டேபிள் சங்க நிர்வாகி அபிரூபன் பேசினர்.